**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.56/2022**

**வா.சா. – 2– ராஜன்**

**நாள். 09.08.2023**

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

என்னுடைய நிரந்தர முகவரி இலுப்பை மரம், 2வது தெரு, நாகல் நகர், திண்டுக்கல். வாதி பாபுலாலையும், அவரது தம்பி கணேசனையும் எனக்கு தெரியும். இந்த வழக்கு சொத்தின் சர்வே எண் மற்றும் அளவுகள் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தானது டாக்டர்.கணேசனுக்கு எந்த வகையில் பாத்தியப்பட்ட சொத்து என்று எனக்கு தெரியாது. டாக்டர்.கணேசன், வாதி பாபுலாலுக்கும், பிரதிவாதி பவானிகணேசனுக்கும் எந்த தேதியில் தான செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. தான செட்டில்மெண்ட் பத்திரம் ரவுண்ட் ரோட்டில் வைத்து தயார் செய்யப்பட்டது. தான செட்டில்மெண்ட் பத்திரத்தை யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. மேற்படி தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் சத்யாவும், நானும் சாட்சி கையொப்பம் போட்டோம். தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் உள்ள வாசகம் மற்றும் எந்த நோக்கத்திற்காக எழுதப்பட்டது என்ற விபரம் பற்றி நேரடியாக எனக்கு தெரியாது. மேற்படி தான செட்டில்மெண்ட் பத்திரத்தை நான் படித்து பார்த்தேனா என்றால், அதில் உள்ள சொத்து விபரம் மட்டும் தான் படித்து பார்த்தேன். நான் சாட்சி கையொப்பம் போடுவதற்கு முன்பு தான செட்டில்மெண்ட் பத்திரத்தை படித்து பார்க்கவில்லை என்றால், முழுமையாக படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேன். மேற்படி தான செட்டில்மெண்ட் பத்திரம் நடைமுறைக்கு வந்ததா என்ற விபரம் எனக்கு தெரியாது. தான செட்டில்மெண்ட் பத்திரப்படி பட்டா மாறுதல் ஏதும் செய்யப்பட்டுள்ளதா என்ற விபரம் எனக்கு தெரியாது. தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் உள்ள கட்டிடங்கள் அனைத்திற்கும் வாதி பாபுலால் வாடகை வாங்கவில்லை. மேற்படி தான செட்டில்மெண்ட் பத்திரத்தை 29.12.2015ம் தேதி டாக்டர்.கணேசன் ரத்து செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. டாக்டர்.கணேசன் ஒரு குற்ற வழக்கில் சிறைத்தண்டனை பெற்று, ஜெயிலுக்கு போன விபரம் பற்றி எனக்கு தெரியும். டாக்டர்.கணேசன் சிறைத்தண்டனை பெற்று, ஜெயிலுக்கு போவதற்கு முன்பு வாதி பாபுலால் வழக்கு சொத்தினை பொறுத்து எவ்வித சுவாதீனமும் அடைய முன்வரவில்லை என்ற விபரம் தெரியும். வழக்கு சொத்தில் லாட்ஜ் கட்டியுள்ளனர். அந்த லாட்ஜில் சிறிது நாட்கள் நான் சூப்பர்வைசராக வேலை பார்த்தேன். நான் அவ்வாறு வேலை பார்த்ததற்கு வாதி பாபுலாலிடம் ஒரு நாளைக்கு ரூ.500 வீதம் சம்பளம் வாங்கினேன். மேற்படி விபரத்தை என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். என்னுடைய நிருபண வாக்குமூலம் வழக்கறிஞர்

அலுவலகத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு தயார் செய்யப்பட்ட நிருபண வாக்குமூலத்தில் தான் நான் கையொப்பம் செய்தேன். மேற்படி நிருபண வாக்குமூலத்தில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. வாதி பாபுலால் எனக்கு நெருங்கிய நண்பர் என்பதால், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2023.08.09 17:25:52 +0530

Additional District Judge,

Dindigul.